1st April 1963]

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** மூலக் கேள்விக்கு நான் அளித்த பதில்தான் இதற்கும்.

*Medical and Engineering Courses*

* 469 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state the several changes proposed to be introduced in the Medical and Engineering courses of studies to meet the needs of the National Emergency ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** புதிய மருத்துவப் படிப்பு (Integrated M.B.B.S. Course) சம்பந்தப்பட்டவரை சபையில் ஓர் அறிக்கை[a] வைக்கப்பட்டுள்ளது. புதிய இன்ஜினீயரிங் படிப்பு பற்றிய விவரங்கள் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

*குடி தண்ணீர்த் திட்டம் (கள்ளக்குறிச்சி)*

* 470 கேள்வி.—திரு. எல். ஆனந்தன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென்னுற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி நகர குடி தண்ணீர்த் திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

THE HON. SRIMATHI JOHTHI VENCATACHELLUM : The Government have recently received the outline proposals for the Kallakurichi water-supply scheme from the Chief Engineer (Public Health Engineering and Municipal Works). The question of sanctioning the scheme is under consideration.

*Rural dispensary (Hosur taluk)*

* 473 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government have received any representation from the erstwhile Salem District Board to open a Rural Dispensary at Nammandahally village in Hosur taluk; and

(b) if so, the action taken thereon ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) No.

(b) Does not arise.

**திரு. ரா. சு. விரப்ப செட்டியார் :** ஸார், இந்த ப்ரொபோஸலானது அனுப்பப்பட்டு டைரக்டர் ஆஃப் மெடிக்கல் சர்வீஸிடம் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அப்படி இருந்தால் அதைப் பரிசீலனைக்கு எடுத்து ஆவன செய்ய முடியுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இதை முதலிலே பஞ்சாயத்து போர்டிலே திறக்கவேண்டுமென்று டிஸைட் செய்தார்கள். மறுபடியும் ப்ரைமரி ஹெல்த் சென்டர் தான் திறக்கவேண்டும், ரூரல் டிஸ்பென்ஸரி வேண்டாம் என்று சொன்னார்கள். ப்ரைமரி ஹெல்த் சென்டர் திறக்கவேண்டுமென்றால், தற்போது அவசர

a Printed as Appendix V on pages 489–490 infra.

நிலைமை இருப்பதை உத்தேசித்து, கட்டடங்களெல்லாம் கட்டுவதில்லை என்று முடிவு எடுத்திருப்பதால் பஞ்சாயத்து போர்டுக்கே எழுதியிருக்கிறோம், ரூரல் டிஸ்பென்ஸரி திறக்கவேண்டுமென்று அவர்களுக்கு அபிப்பிராயம் இருந்தால் அதைப் பற்றித் தெரிவிக்கச் சொல்லியிருக்கிறோம்.

### சித்த வைத்தியர்கள்

* 475 **கேள்வி.—திரு. அ. ஆறுமுகம் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ் நாட்டிலுள்ள எல்லா சித்த வைத்தியர்களுக்கும் வாய் மொழிப் பரிட்சை வைத்து சர்ட்டிபிகேட் வழங்க என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (1) The rules for the registration of traditionally trained or/and hereditory practitioners of Indigenous medicine which include Siddha Vaidyas also have been framed.

(2) As per the rules oral examinations are conducted in batches.

(3) The Central Board of Indigenous Medicine has been constituted in December 1962. This Board will scrutinise the applications of the successful candidates at the oral examination and orders for registration will be issuedon the basis of the recommendations of the Board.

### *Food adulterants*

* 477 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any instructions have been received from the Central Government regarding the question of prohibition of manufacture and sale of food adulterants; and

(*b*) if so, the action taken in the matter ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) & (இ) இது விஷயமாய் எந்தத் தகவலும் கொடுப்பது பொது நலனுக்கு உகந்ததல்ல.

### *General Hospital (South Madras)*

* 478 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to build a General Hospital for South Madras?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஆம். உண்டு. இந்த ஆஸ்பத்திரியை நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கட்டுவதாக உத்தேசம்.